**மாதிரி வினாத்தாள்**

நோய்த்தடைக்காப்பு மண்டலம் - பகுதி II

10th Standard

**அறிவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 01:15:00 Hrs

Total Marks : 40

## பகுதி - அ

5 x 1 = 5

1) மறைமுகமாக நோய் பரவும் முறை .............................

(a) சளி சிந்துதல் (b) வாய் வழியாகத் தெரித்தல் (c) தாய் சேய் இணைப்புத் திசு (d) நோயாளி பயன்படுத்தும் உடமைகள்

2) பிற உயிரிகளிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்ட எதிர்ப்பொருள்கள், மனிதருக்கு நோய்த் தடுப்பூசியாகப் போடப்படுகின்றன. பின்வருவனவற்றுள் ................. எவ்வகைத் தடுப்பூசி முறை?

(a) செயற்கையான செயல்மிகு நோய்த் தடுப்பு முறை (b) செயற்கையான மந்தமான நோய்த் தடுப்பு முறை

(c) இயற்கையான செயல்மிகு நோய்த் தடுப்பு முறை (d) இயற்கையான மந்தமான நோய்த் தடுப்பு முறை

3) பிறந்த குழந்தைக்கு முதன் முதலில் கொடுக்கப்படும் நோய்த்தடுப்பூசி ................

(a) வாய்வழி போலியோ (b) DPT (c) DPT மற்றும் போலியோ (d) BCG

4) ஒரு மாணவி புரத உணவைத் தவிர்த்து அதிகப்படியான கார்போஹைட்ரேட் உணவை உண்கிறாள்.எந்தச் சத்துக் குறைபாடு நோய் அவளுக்கு ஏறப்டும் ?

(a) குவாஷியோர்கர் (b) மாலைக்கண் (c) டயாபட்டிஸ் (d) டவுன் குறைபாடு

5) உறுதிப்படுத்துதல்: (A) டயாபட்டிஸ் மெலிடஸ் நோயாளிகளின் இரத்தத்தில் காணப்படும் கூடுதல் சர்க்கரை பயன்படுத்தப்படாமல் சிறுநீர் வழியாக வெளியேற்றப்படும். காரணம் (R) கணையம் போதுமான இன்சுலினைச் சுரப்பதில்லை,

(a) A மற்றும் B சரியானது. R, A வுக்கான சரியான விளக்கம். (b) A மற்றும் R சரியானது. R, A வுக்கான சரியான விளக்கம் அல்ல

(c) A சரி ஆனால் B தவறு (d) A தவறு ஆனால் B சரி

## பகுதி - ஆ

5 x 2 = 10


6) சரியான கூற்றை கண்டுபிடிக்க (சரி/தவறு) அ) காசநோய், மைக்கோபாக்டீரியம் டியூபர்குளோசிஸ் எனும் பாக்டீரியாவால் உருவாகிறது. ஆ) டைபாய்டு, ட்ரைகோபைட்டான் என்னும் பூஞ்சையால் உருவாகிறது. இ) மலேரியா, பிளாஸ்மோடியம் வைவாக்சினால் உருவாகிறது. ஈ ) இன்புளுயன்சா, எண்டமீபா ஹிஸ்டலைடிகா என்னும் புரோட்டோசோவாவினால் உருவாகிறது.

7) பெண் அனாபிலஸ் கொசு மூலம் ஸ்போரோசுவாய்டுகள் ஒரு மனிதனின் உடலின் நுழைந்தவுடனே மலேரியா காய்ச்சல் அவருக்கு ஏற்படுவதில்லை. ஏன்? விளக்குக.

8) பிளாஸ்மோடியம் வாழ்க்கை சுழற்சியின் நிலைகளைக் கண்டறிக: அ) கொசு மனிதனுள் மலேரியா கிருமியை உட்செலுத்துதல். ஆ) நோயுற்ற மனிதரை அனாபிலஸ் பெண்கொசு கடிக்கும் பொழுது பிளாஸ்மோடியம் கொசுவின் உடலுக்குள் செல்லுதல்.

9) ஈக்களால் பரவக்கூடிய நோய்கள் இரண்டினைக் கூறுக. அந்நோய்களை ஏற்படுத்தும் நோய்க் காரணிகளையும் குறிப்பிடுக.

10) கீழ்க்காணும் நிரல் படத்தை உற்றுநோக்குக.




கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து 'x' -ன் நோய்க்காரணி மற்றும் வளர்ச்சிதை மாற்றக் குறைபாட்டு நோயைக் கூறுக:

| குறைபாட்டு நோய் | காரணி |
|---|---|
| அ)டயாபடிஸ் இன்சிபிடஸ் | ADH ஹார்மோன் குறைபாடு |
| ஆ) டயாபடிஸ் மெல்லிடஸ் | இன்சுலின் ஹார்மோன் குறைபாடு |
| இ) கரோனரி இதய நோய் | இதய தசைகளுக்கு இரத்தம் அளிக்கும் தமனியில் அடைப்பு |
| ஈ) சிறுநீரக செயலிழப்பு | இரத்தத்தை வடிகட்டும் நெப்ரானின் செயலிழப்பு |

## பகுதி - இ

3 x 5 = 15

11) மனிதனில் நடைபெறும் பிளாஸ்மோடியத்தின் வாழ்க்கைச் சுழற்சியை விவரிக்க.

12) சத்துப்பற்றாக்குறையினால் ஏற்படும் பல்வேறு நோய்களைக் குறிப்பிடுக. அந்நோய்களுக்கான அறிகுறிகளை எழுதுக.

13) மலேரியா நோயைப் பற்றி விரிவாக எழுதுக.

*****************************************